வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். OS 31/2022

வழக்குசாட்சி PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிமேகலை | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஜெயராமன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 72 |

தேதி 07.01.2026

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது மகன் ஜெயசீலன் இறந்து 9 ஆண்டுகள் ஆகிறது. அவரது வாரிசு சான்றிதழ் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். எனது சாட்சியத்தினை எழுத்து மூலமான பிரமாண வாக்குமூலமாக இங்கு தாக்கல் செய்கிறேன். எனது தரப்பிற்கு ஆதரவாக குடும்ப அட்டை நகல் வா.த.சா.ஆ. 1 ஆகவும் (அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது), ஆதார் அட்டை நகல் வா.த.சா.ஆ. 2 ஆகவும்(அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது), எனது கணவர் இறப்புச் சான்றிதழ் நகல் வா.த.சா.ஆ. 3 ஆகவும், எனது கணவர் வாரிசு சான்றிதழ் நகல் வா.த.சா.ஆ. 4 ஆகவும், HMOP 89/2007 உத்தரவு நகல் வா.த.சா.ஆ. 5 ஆகவும்(அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது), முதல் தகவல் அறிக்கை நகல் வா.த.சா.ஆ. 6 ஆகவும், இறப்பு அறிக்கை நகல் வா.த.சா.ஆ. 7 ஆகவும், இறப்புச் சான்றிதழ் நகல் வா.த.சா.ஆ. 8 ஆகவும், வாரிசு சான்றிதழ் மனு நகல் வா.த.சா.ஆ. 9 ஆகவும், இரண்டாவது வாரிசு சான்றிதழ் மனு நகல் வா.த.சா.ஆ. 10 ஆகவும், வாரிசு சான்றிதழ்

நிராகரிக்கப்பட்ட சான்றிதழ் நகல் வா.த.சா.ஆ. 11 ஆகவும் தாக்கல் செய்கிறேன். மேற்படி எனது வழக்கினை ஏற்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.